மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஈ) பல்கலைக்கழகக் கல்லூரித் தேர்வுகள் ஆசிரியர்களும் ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களும் தேர்வின்போது மாணவர்களை கண்காணித்தல் சட்டமுன்வடிவு 1981.

மாண்புமிகு திரு, செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு பல்கலைக் கழக-கல்லூரித் தேர்வுகள் (ஆசிரியர்களும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களும் தேர்வின் போது மாணவர்களைக் கண்காணித்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1980) திரும்ப பெற அனுமதி கோருகிறேன்.

பல்கலைக் கழகத் தேர்வுகளைப் பொறுத்தமட்டில் பல்கலைக் கழக ஆசிரியர்கள் தாங்கள் கண்காணிக்க முடியாது என்று சொல்கிற அளவுக்கு பாய்காட் செய்கிற அளவுக்கு போராட்டம் நடத்துகின்ற முறையை கடந்த 2, 3 ஆண்டுக்காலமாக நாம் பார்த்து வந்தோம், அதனால் பரிட்சைகள் பாதிக்கப்பட்டன. அது மட்டுமல்ல மாணவர்கள் பெருமளவுக்கு பாதிக்கப்பட்டு அதனால் ஏற்பட்ட நட்டத்தையும் நாம் உணர்ந்திருக்கிறோம். ஆகவே, பல்கலைக் கழகம் தேர்வுகளை கண்காணிப்பது அவர்களுடைய கடமையாகும் என்று சொல்கிற முடிவை அரசு எடுத்து அதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வர முடிவுசெய்து அறிமுகம் செய்தோம்.

[பிற்பகல் 1.20]

ஆனால் அதை மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் எதிர்த்தார்கள்; , கல்லூரி ஆசிரியர்கள் சங்கத்தைச் சார்ந்தவர்களும் அதை எதிர்த்தார்கள். எதிர்த்து, இனிமேல் அத்தகைய நிலைமைகளுக்கு நாங்கள் இடம் தர மாட்டோம்; நாங்கள் நல்லமுறையில் ஒத்துழைப்பு தருகிறோம் என்பதனையும் சொன்னார்கள். வேறு வகையிலே அதைப் பணி விதிகளிலே கடமையாக வருகின்ற வகையிலேயும் அரசு செய்வதற்கு அவர்கள் தங்களுடைய கருத்தைத் தெரிவித்தார்கள். ஆகவே, இப்பொழுது அரசு கல்லூரிகளின் ஆசிரியர்களுடைய பணி விதிகளிலே பணியினுடைய ஒரு பகுதியாக அதைக் கொண்டு வருவதற்கு நாம் ஒரு 'எக்சிகியூடிவ் ஆர்டர்' போடுவதற்கு, ஒரு முடிவை எடுத்திருக்கின்றோம்.

1981 மே 13] [திரு. செ. அரங்கநாயகம்]

அந்த அளவிற்கு ஆசிரியர்கள் ஒத்துழைப்பு தருகின்ற காரணத்தினாலேயும் இப்பொழுது அப்படிப்பட்ட நிலைமைகளை நாங்கள் உருவாக்க மாட்டோம் என்று அவர்கள் சொல்லி வருகின்ற காரணத்தினாலேயும், ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாம் இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்ற வேண்டியதில்லை என்று அரசு கருதுகிறது.

பிறகு அப்படிப்பட்ட நிலைமைகளை அவர்கள் உருவாக்குவார்களேயானால் நிச்சயமாக அரசு சட்டம் கொண்டு வரத்தான் செய்யும்காரணம் நாம் ஆசிரியர்களுடைய உரிமைகளையும் பாதிக்கக் கருதவில்லை ஆனால் அதேநேரத்தில் மாணவர்களுடைய கல்வியை நாம் மிக முக்கியமாகக் கருதுகிறோம். அது ஒரு சமூகநலனாக இருக்கின்ற காரணத்தினாலே ஆசிரியர்கள் ஒத்துழைப்பு இருக்கும் என்று கருதி நாம் இன்றையதினம் அந்தச் சட்டமுன்வடிவைத் திரும்பப் பெறுவது என்ற முடிவை மேற்கொண்டிருக்கிறோம். ஆகவே இதைத் திரும்பப் பெறுவதற்கான அனுமதியை நான் கோருகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவைத் திரும்பப் பெறுகிறேன்,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இச் சட்ட முன்வடிவு திரும்பப் பெறப்பெற்றிருக்கிறது.

### 4. அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி)

### (இ) பேரவையின் அலுவல்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

> "இன்றைய நிகழ்ச்சி நிரலில்—
>
> இனம் 4, அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல் என்ற தலைப்பில் குறிப்பிட்டுள்ள சட்டமுன்வடிவுகளில், இரண்டாவதாகக் குறிப்பிடப்பெற்றுள்ள சட்டமுன்வடிவை நாளை, 14–5–1981 அன்று முதலாவதாக எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும். முதல், மற்றும் மூன்று, நான்கு ஆகிய சட்டமுன்வடிவுகளை, இன்று மாலை 4 மணிக்குக் கூடி பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS